# பெரியவாச்சான்பிள்ளை வைபவம்

ஸ்ரீ உ.வே. எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி, M.A., B.L.,
அட்வகேட்

(ஆசிரியர் : ஸ்ரீவைஷ்ணவ சுதர்சனம்)

ஸ்ரீமத் க்ருஷ்ணஸமாஹ்வாய நமோ யாமுநஸூநவே:
யத்கடாக்ஷைகலக்ஷ்யாணாம் ஸுலப: ஸ்ரீதர: ஸதா: ॥

நாலாயிர திவ்யப்ரபந்தங்களுக்கும், ஸ்ரீராமாயணத்தில் ஸாரமான பல ச்லோகங்களுக்கும், ஸ்தோத்ரரத்ந கத்யத்ரயங்களுக்கும், ரஹஸ்யத்ரயத்திற்கும் அத்யத்புதமான வ்யாக்யானங் களருளிச்செய்த ஸ்ரீக்ருஷ்ணசூரி எனும் பெரியவாச்சான் பிள்ளையின் பெருமை ஒருவரால் பேசிமுடிக்கவொண்ணாதது. அப்பெருமைக்கடலிலே ஒரு சில திவலை அனுபவிக்க இழிகின்றோம்.

அவதாரஹஸ்யம்

திருக்குடந்தைக்கு அருகிலே, திருவெள்ளியங்குடி என்னும் திவ்யதேசத்திற்கு மிக அருகிலுள்ள சங்கநல்லூர் என்னும் ஊரிலே, பூர்வசிக ஸ்ரீவைஷ்ணவ ப்ராஹ்மணோத்தமரான யாமுநாசார்யருக்கும் நாச்சியாரம்மாளுக்கும் திருக்குமாரராக, எழுநூறு வருடங்களுக்கு முற்பட்ட ஸர்வஜித் வருஷம் ஸ்ரீ ஜயந்தியில் (ஆவணி ரோகிணியில்) க்ருஷ்ணன் என்னும் திருநாமத்துடன் அவதரித்தவர் இப்பேராசிரியர். இவர் க்ருஷ்ணனின் அவதாரவிசேஷமே என்பதை இக்கட்டுரையில் உபபத்திகளைக் காட்டி நிருபிப்போம்.

திருமங்கையாழ்வார் தம் பெரிய திருமொழியில், திருக்கண்ணமங்கையில் எழுந்தருளியிருக்கும் பக்தவத்ஸலனான கண்ணனை ''பெரும் புறக்கடலை'' (7 - 10) என்னும் திருமொழியிலே அற்புதமான அடுக்கு மொழிகளிலே தொண்ணூற்றெட்டு திருநாமங்களால் போற்றிவிட்டு, பத்தாவதான பாசுரத்தில் வழக்கம்போல் இப்பத்தைப் பாடுபவர் அடையும் பலனையும் பேசிவிட்டு, வேறு எந்தத் திருமொழியிலும் இல்லாத முறையில்,

''மெய்ம்மை சொல்லில் வெண்சங்கமொன்றேந்திய கண்ண! நின்றனக்கும் குறிப்பாகில் கற்கலாம் கவியின் பொருள்தானே'' என்று பாட்டுக்கு விஷயமான கண்ணனையே விளித்து, ''உனக்குத் திருவுள்ளமானால் இக்கவியின் பொருளை (என்னிடமிருந்து) கற்கலாமே'' என்று நியமித்துள்ளார்.

ஆழ்வார்களுடன் நேரே பேசிப்போந்தவனென்று புகழ்படைத்த அர்ச்சாரூபியான கண்ணன், ஆழ்வார் இப்படி நியமித்தபின் பேசாமலிருந்திருப்பானா? அவஶ்யம் பேசியிருப்பான். என்ன பேசியிருப்பான்? 'ஸர்வஜ்ஞனான எனக்கே உமது கவியின் பொருள் தெரியும்; உம்மிடம் கற்கவேண்டிய அவஶ்யமில்லை' என்று சொல்லியிருப்பானா? பரமரஸிகனான அவன் ஒருகாலும் அப்படிச் சொல்லியிருக்க மாட்டான். ''ஆழ்வீர்! ஸர்வஜ்ஞனான எனக்கும் பொருள் உணர அரிதாம்படி மிக ஆழ்ந்ததாகவன்றோ உமது கவி இருக்கிறது. அதை உம்மிடமே சிஷ்யனாகிக் கற்கவே ஆசைப்படுகிறேன். உமது முன்னோடிகளான மற்றையாழ்வார்களுடைய கவியின் பொருளையும் உம்மிடமிருந்தே கேட்க ஆசைப்படுகிறேன். மற்றும் பல அரும்பொருள்களையும் உம்மிடம் கேட்டு இவ்வுலகிற்கு வெளியிட விரும்புகிறேன். ஆயினும், இப்போது அர்ச்சாவதாரமாகையாலே இதைச் செய்யமுடியாது. மற்றோரவதாரத்தில் விபவ ரூபத்தையெடுத்து, கலிகன்றியான உம்மிடமே எல்லாக் கவிப்பொருள்களையும் கற்று, உலகுய்ய வெளியிடக்கடவேன்'' என்றே அருளியிருப்பான்.

அதன்பின் நடந்தது பிற்பட்டவர்களான நமக்கு மிகத்தெளிவாய் விளங்குகிறது. நாலு கவிப்பெருமாளாய், சொல்லின் செல்வரான திருமங்கையாழ்வார் மற்றுமோர் கார்த்திகையில் கார்த்திகை நாளிலேயே, 'கலிகன்றி' என்னும் பெயருடனேயே ஸ்ரீஸூக்திமஹார்ணவர் என்று புகழ்பெற்ற நம்பிள்ளையாக அவதரித்து, ஆழ்வார்களின் கவிப்பொருள்களையெல்லாம் பல்லாயிரவர்க்கு வாரிவாரி வழங்கினார் என்று தெளிவாய் விளங்குகிறது. ''சங்கமொன்றேந்திய கண்ண'' என்னும் ஆழ்வாரது பொய்யில்பாடலை அடியொற்றி, 'ஶங்கடபுரம்' என்று வழங்கப்படும் சங்கநல்லூரிலே, 'அனைவரையும் வெற்றிகொள்ளும் பரமனே இவன்' என்றுணர்த்துவதற்காக ஸர்வஜித் வருஷத்திலே, 'கண்ணனே இவன்' என்று உணர்த்துவதற்காக ஆவணியில் ரோகிணியாம் ஸ்ரீஜயந்தியன்று யாமுநதீர்த்தத்தில் தனக்குள்ள ஆதரம் தோற்றி, தீர்த்தரான யாமுநரிடத்திலே 'கண்ணன்' க்ருஷ்ணன்) என்றே பெயர் பெற்று அவதரித்து, கலிகன்றியாம் நம்பிள்ளையின் பரமப்ரீதிக்குப் பாத்திரரான ப்ரதாந ஶிஷ்யராகி, கவிப்பொருள்களையும், மற்றும் ஸகலார்த்தங்களையும் கேட்டு, அவரது நியமனம் பெற்ற, அவ்வர்த்தங்கள் அனைத்தையும் உலகுய்ய வ்யாக்யானங்களாக வெளிப்படுத்தியருளிய க்ருஷ்ணஸூரியான பெரியவாச்சான்பிள்ளை கண்ணமங்கைக் கண்ணனே என்பது மிகத் தெளிவாக விளங்குகிறது.

''க்ருஷ்ணத்வைபாயநம் வ்யாஸம் வித்தி நாராயணம் பரம் கோஹ்யந்யோ புவி மைத்ரேய! மஹாபாரதக்குத் பவேத்'' மைத்ரேயனே! க்ருஷ்ணத்வைபாயனரான வேதவ்யாஸரை பரனான நாராயணனென்றே அறிவாய். வேறு எவன் இவ்வுலகில் மஹாபாரதத்தை இயற்றமுடியும்? என்று பராஶரமஹர்ஷி தமது ஸ்ரீவிஷ்ணு புராணத்தில், தம் குமாரனான வேதவ்யாஸ பகவான் நாராயணனின் அவதாரமே என்பதை மஹாபாரதரசனையாகிற உபபத்தியைக் காட்டி நிரூபித்தார். ''மஹத்த்வாத் பாரவத்த்வாத் ச மஹாபாரதமுச்யதே'' என்கிறபடியே லக்ஷம் க்ரந்தங்களுக்கு மேற்பட்ட சொற்பெருமையும், பொருட்பெருமையும் பெற்ற மஹாபாரதம் போன்றதொரு க்ரந்தத்தை நாராயணனுடைய அம்ஶாவதாரமான ஒருவராலேயே இயற்றமுடியும் எனில், அதைக்

காட்டிலும் சொற்பெருமையும், ஆயிரம் மடங்கு மிகுந்த பொருட்பெருமையும் பெற்ற நாலாயிர திவ்யப்ரபந்த வ்யாக்யானங்களையும், தனிஸ்லோகம் முதலான வ்யாக்யானங்களையும் அருளிச் செய்தவர் அந்த நாராயணனுடைய மற்றோர் அவதாரமாகவே யிருக்க முடியும் என்பது சொல்லாமலே விளங்கும்.

வாஸுதேவன் ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப:, உண்ணும் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன் என்னும் மஹாத்மா எனக்கே மிகவும் கிடைத்தற்கரியவன் என்று கீதையில் நெஞ்சாறல் பட்ட கண்ணன், அப்படிப்பட்ட மஹாத்மாக்களான ஆழ்வார்கள் பத்துப்பேரை அவதரிக்கச் செய்து, அவர்களுடைய திருவுள்ளக்கருத்துக்களை உலகினர் உணராமல் இழந்துவிடலாகாது என்னும் பரம கருணையாலே, அவர்களில் சரமரான திருமங்கையாழ்வாரையே நம்பிள்ளையாக அவதரிக்கச் செய்து, பூர்வாவதாரத்தில் தன்னிடம் ஸர்வார்த்தக்ரஹணம் செய்த அவரிடமே உலகுய்ய அவற்றை வெளிப்படுத்தினான் என்றும் உண்மை உய்ந்த்துணர்வார்க்குக் கைவிலங்கு கனியாகவும் வெள்ளிடைமலையாகவும் விளங்குகிறது.

ஸர்வேஸ்வரனான நாராயணன் ஆசார்யத்வத்தை ஆசைப்பட்டு நாராயணரிஷியாக அவதரித்துத் திருமந்திரத்தையும், விஷ்ணுலோகத்திலே விஷ்ணுவாகி த்வயத்தையும், கண்ணனாகி கீதையில் ஸ்ரீக்ருஷ்ண சரமஸ்லோகத்தையும், ராமனாகி ஸ்ரீராமசரம ஸ்லோகங்களையும், ஸ்ரீவராஹப்பெருமானாகி வராஹசரமஸ்லோகங்களையும் அருளிச்செய்து, நீண்ட காலமாகியும் அவற்றின் ரஹஸ்யார்த்தங்களை உலகினர் உணரமுடியாமலிருந்தபடியால், அவனுடைய ஆசார்யத்வம் நிறம்பெறாமலிருந்தது. அவனே ஆசாரயஸ்ரேஷ்டரான பெரியவாச்சான் பிள்ளையாக அவதரித்து திருமந்திரம், த்வயம், ஸ்ரீக்ருஷ்ண சரமஸ்லோகம் எனப்படும் ரஹஸ்யத்ரயத்தின் அர்த்தத்தைப் பரந்த ரஹஸ்யம் முதலான ரஹஸ்யக்ரந்தங்களின் மூலமும், மற்றுமுள்ள ஸ்ரீராம வராஹசரமஸ்லோகங்களின் அர்த்தத்தை அபய ப்ரதாந ஸாரத்திலும், ஸ்ரீராமாயண பாரதாதி தனிச்லோகத்திலும் வெளியிட்டபின்பே அவனது ஆசார்யத்வம் நிறம்பெற்றது. அதனாலேயே கீதாசார்யனான போது வெறும் ஆசார்யனாயிருந்த அக்கண்ணன் இவ்வவதாரத்திலே பெரிய ஆசார்யனானதையிட்டுப் பெரிய வாச்சான்பிள்ளை எனப்பெயர் பெற்றான் போலும். அபயப்ரதாந ஸ்லோகங்களை அருளிச்செய்தபோது 'அபயப்ரதன்' என்று புகழ்பெற்றிருந்த அவன், அந்த ஸ்லோகங்களின் பொருளை உலகெல்லாம் உய்ய வெளியிட்ட இவ்வவதாரத்தில் 'அபயப்ரதராஜர்' என்று பட்டம் பெற்றான் போலும். வ்யாஸரூபமான பூர்வாவதாரத்தில் வெளியிடப்பெற்றதாய், பதர்கூட்டிக் கழிக்க வேண்டியிருக்குமதான மஹாபாரதத்தில் ஸாரமான த்ரௌபதீ ஸ்ரணாகதிஸ்லோகத்தின் ஸாரார்த்தத்தையும், பரமஸாரமான ஸ்ரீக்ருஷ்ணசரமஸ்லோகத்தின் ஸாரார்த்தத்தையும் வெளியிட்டதன்மூலம் மஹாபாரதத்தின் தாத்பர்யார்த்தத்தை வெளியிட்ட பெருமையும் க்ருஷ்ணத்வைபாயனரின் மற்றோர் அவதாரமே இக்கிருஷ்ணஸூரி என்பதை விளக்கும்.

தமது விபுலமான க்ரந்தங்களில், தமது இவ்வவதார ரஹஸ்யத்தை கீதையில் கண்ணன் வெளியிட்டதுபோல் வெளியிட்டால், தமது ஆசார்யத்வமும் அவனுடையதைப் போலே நிறங்கெட்டுவிடுமாகையாலே, இவ்வாசார்யர் அதை எங்குமே வெளியிடவில்லை.

ஆயினும், தமது ஆசார்யரான நம்பிள்ளையின் அவதாரரஹஸ்யத்தை 'குரும்ப்ரகாஸயேத் தீமாந்' என்கிற ரீதியிலே ஓரிடத்திலே உணர்த்தும்போது, தமது அவதார ரஹஸ்யத்தையும் மறைமுகமாகக் காட்டிவிடுகிறார். அதாவது – பெரியதிருமொழியிலே 5-8-7).

''ஓதுவாய்மையும் உவனியப்பிறப்பும் உனக்கு முன் தந்த அந்தணன் ஒருவன்'' என்னும் பாசுரத்திலே சாந்தீபினிக்கு சிஷ்யனாகி அவனுக்கு அருள் செய்தது போலே எனக்கும் அருள்செய்ய வேண்டும் என்று திருவரங்கத்தம்மானைத் திருமங்கையாழ்வார் ப்ரார்த்திக்கு மிடத்தை வ்யாக்கியானம் செய்யும்போது.' அந்தணன் ஒருவன்)

''முற்பட த்வயத்தைக்கேட்டு இதிஹாஸபுராணங்களையும் அதிகரித்து, பரபக்ஷ ப்ரதிக்ஷேபத்துக்குடலாக ந்யாய மீமாம்ஸைகளையும் அதிகரித்து, போதுபோக்கும் அருளிச் செயலிலேயாம்படி பிள்ளையைப்போலே அதிகரிப்பிக்க வல்லவனையிறே 'ஒருத்தன்' என்பது''

என்று வ்யாக்கியானம் செய்வதன்மூலம் சாந்தீபினியைப்போலே நம்பிள்ளையும் கண்ணனுக்கே ஆசார்யனாகும் பெருமை பெற்றவர் என்று நம்பிள்ளையின் அவதாரரஹஸ்யத்தை உணர்த்தும்போது, தம்மையுமறியாமல் தமது அவதார ரஹஸ்யத்தையும் உணர்த்திவிடுகிறார் பெரியவாச்சான்பிள்ளை என்பது அறிந்து இன்புறத்தக்கது.

இத்தகைய பெருமைபெற்ற பெரியவாச்சான்பிள்ளை அருளிய அரும்பொருள்களை உலகினர்க்கு வாரிவழங்குவதிலேயே தம் வாழ்நாளைச் செலவிட்ட மஹாபுருஷரான ஸ்ரீ உ.வே. காரப்பங்காடு ஸ்வாமியின் ஸதாப்தி நிறைவு மலரில் அப்பெரியவாச்சான் பிள்ளையின் அவதாரரஹஸ்யத்தை வெளியிட்டு வைத்தைப் பெற்றோம்.